**செய்தி வெளியீடு எண்: 218** **நாள்: 06.03.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

**2019–** ஆம் ஆண்டில் நடைபெற்ற சிறப்பு சுருக்கமுறைத் திருத்தத்தின் போது புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்காக **14,30,669** விண்ணப்பங்கள் பெறப்பட்டதில், **13,96,274** விண்ணப்பங்கள் வாக்காளர் பதிவு அலுவலர்களால் ஏற்கப்பட்டன. மேற்கண்ட புதிய வாக்காளர்களுக்கு வண்ண புகைப்பட வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த **2017** மற்றும் **2018** ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சிறப்பு சுருக்க முறைத் திருத்தங்களின்போது மேற்கொள்ளப்பட்டதைப் போன்றே மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு அச்சிட்டு விநியோகம் செய்வதற்காக இந்த ஆண்டும் தரவுகள் ஒப்பந்ததாரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மூலம் புதிய வண்ண புகைப்பட வாக்காளர் அடையாள அட்டைகள் விநியோகம் செய்ய ஏதுவாக, தரவுகள் பெறப்பட்ட பத்து நாட்களுக்குள் சட்டமன்றத் தொகுதி பகுதி வாரியாக வண்ண புகைப்பட வாக்காளர் அடையாள அட்டைகளை ஒப்பந்ததாரர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வாக்காளர் அடையாள அட்டைகள் பெறப்பட்டவுடன் வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக, வாக்காளர்களிடமிருந்து ஒப்புகை பெற்று **22.03.2019–**ம் தேதிக்குள் விநியோகிக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

**2019–**ஆம் ஆண்டின் நடைபெற்ற சிறப்பு சுருக்கமுறைத் திருத்தத்தின் போது பதிவுகளில் திருத்தம் செய்வதற்கான படிவம்–**8** மற்றும் தொகுதிக்குள்ளேயே முகவரி மாற்றத்திற்கான படிவம்–8A, **3,41,620** வாக்காளர்களிடமிருந்து பெறப்பட்டன. அவர்களுக்கு வண்ண புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை வழங்குமாறு தி/ள். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். மேற்சொன்ன வாக்காளர்கள் அருகிலுள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அரசு இ–சேவை மையத்தினை அணுகி உரிய கட்டணமான ரூ.25/– செலுத்தி வண்ண புகைப்பட வாக்காளர் அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதுதொடர்பாக அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களும் செய்தி வெளியீடு வெளியிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**